யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## ★ இஸ்ரேலும் இலங்கைக்கு இராணுவ தளபாடம் வழங்கும்

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 02 இதழ் 101
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16 - 5 - 1995

(கொழும்பு)
இலங்கைக்கு தேவையான இராணுவ உதவிகளை வழங்குவதற்கு இஸ்ரேல் முன்வந்துள்ளது. இலங்கைப் படையினருக்கு தற்போது அவசரமாகத் தேவைப்படும் இராணுவஉதவிஎன்னஎன்பது குறித்து இஸ்ரேல் அரசு இலங்கையுடன் அவசர தொடர்புகளை மேற்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் இரு அவ்ரோ விமானங்கள்சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து இலங்கை அரசு சர்வதேச நாடுகளிடம் இராணுவ

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் மீண்டும் இஸ்ரேல் தூதரகம்

(கொழும்பு)
இலங்கையில் மீண்டும் இஸ்ரேல தூதரகத்தை திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இலங்கைப் படையினருக்கு தேவையான இராணுவ தளபாட உதவியை வழங்க இஸ்ரேல் முன்வந்ததை தொடர்ந்தே கொழும்பில மீண்டும் இஸ்ரேல் தூ ர த்தை நிறுவும் சாத்தியம் பற்றி ஆராயப்பட்டு வருகிறது. இதற்கான

(6-ம் ... க்க பார்க்க)

# ★ திருமலை கல்லாறில் விடுதலைப் புலிகளால்

# ரோந்துப் படையணி சிதறடிப்பு

# 14 இராணுவம் பலி; பலர் காயம்

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)
திருமலை கல்லாறு காட்டுப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் 14 இராணுவத்தினர் அதே இடத்தில் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். கனரக ஆயுதங்கள் பலவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்கள்.

திருமலை கல்லாறுப் பகுதியில், விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடாத்துவதற்காக பதுங்கியிருந்த இராணுவ அணி ஒன்று நேற்று காலை 5-25 மணியளவில் முகாம் திரும்பிக்கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் இந்த அதிரடித் தாக்குதலைத் தொடுத்தார்கள்.

கல்லாறு இராணுவ முகாமுக்கு 400 மீற்றர் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இந்த தாக்குதலில் 14 இராணுவத்தினர் அதே இடத்தில் பலியானார்கள். மற்றவர்கள் காயங்களு

[5-ம் பக்கம் பார்க்க]

## 16 அப்பாவிப் பொதுமக்களை படையினர் சுட்டுக்கொன்றனர்?

[திருமலை]
திருமலை கல்லாறு பகுதியில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து பதினாறு பொதுமக்களை படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கல்லாறு பகுதியில் ரோந்து சென்ற படையினர் பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த படையினர் அங்கிருந்த பொதுமக்களை பிடித்து சுட்டுக்கொன்றதாகதெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு16பொதுமக்களை சுட்டுக்கொன்ற படையினர் அவர்

[5ம் பக்கம் பார்க்க]

## கிழக்கையாவது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டுமாம் - அரசு முயற்சி

[கொழும்பு]
கிழக்கு மாகாணத்தையும் வடக்கு மாகாணத்தையும் இணைத்து போராடிவரும் விடுதலைப் புலிகளின் இலட்சியத்தை முறியடிக்கும் விதத்தில் முதலில் கிழக்கு மாகாணத்தில் புலிகளை ஒடுக்கும் நோக்கில் அரசும் இராணுவமும் செயற்படுவதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

வடக்கில் பெரும்பாலான பிரதேசத்தை தமது சட்டுப்பாட்டில் வைததிருக்கும் புலிகளை முறியடித்து கிழக்கிலும் அவர்களை வேரூன்ற விடாமல் தடுக்கலாம் என அரசும்

(5-ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் இனக் கலவரத்தை தூண்ட தீயசக்திகள் முயற்சி

[கொழும்பு]
நாட்டின் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி இனவாத சக்திகள் தெற்கில் இனக் கலவரத்தைத் தூண்டிவிடக்கூடும் என அரசு அச்சம் அடைந்துள்ளதாம்.

இதையடுத்து தெற்கில் இனக் கலவரம் ஒன்று ஏற்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளதுடன், இவ்வாறான தீய மற்றும் அரச விரோதச் சக்திகளின் நடவடிக்கைகள் குறித்துப் பொலிஸாரும், புலனாய்வுத்துறையினரும் தகவல்களைத் திரட்டி வருகின்றனராம்.

இதன் ஒரு கட்டமாக இன்றைய சூழ்நிலையில் வெகுஜனத்

(5ம் பக்கம் பார்க்க)

## ஒரு மாத காலப் போரில் 300 படையினர் பலி

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையிலான கடந்த ஒரு மாதகாலப் போரில் 300 படையினர் வரை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 19ம் திகதி ஆரம்பமான இப்போரில் கிழக்கு மாகாணத்தில் தினமும் எட்டுப்படையினர் வரை கொல்லப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## மூன்று மோதல்களில் 13 புலிகள் வீரச்சாவு

(திருமலை)
திருமலை செட்டிமலைக் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலில் பத்து போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்.

கப்டன் வேங்கை (இராசையா திவாகரன் - யாழ்ப்பாணம்), லெப். ஜெயந்தன் அல்லது நிருபாஸ் (மகாலிங்கம் விக்னேஸ்வரன் திருமலை),

[5ம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் ராணுவ முகாம் பகுதியில் வெடிச் சத்தம்

(கொழும்பு)
காங்கேசன்துறை ராணுவ முகாமை அண்டியுள்ள பிரதேசங்களில் நேற்று காலை பெரும் வெடிச் சத்தம் கேட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

வெடிச்சத்தத்தை அடுத்து காங்கேசன்துறை முன்னணிக்

[5-ம் பக்கம் பார்க்க]

## வெசாக் கொண்டாட்டம் தெற்கில் சோபிக்கவில்லை

(கொழும்பு]
தென்பகுதியில் குறிப்பாக கொழும்பில் வெகு விமர்சையாக கொண்டாடப்படும் வெசாக் விழா இம்முறை சிறப்பாக கொண்டாடப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் வெசாக்

(5-ம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவரின் உண்ணாவிரதம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைப்பதை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் நடாத்திவந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் காலையுடன் இடைநிறுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மருத்

[6-ம் பக்கம் பார்க்க]

## புதிய சம்பளம் வழங்க ஏற்பாடு

[திருநெல்வேலி]

ஆசிரியர்களுக்கான புதிய அதிகரித்த சம்பளம் வழங்க நடவடிக்கைகள் கோட்டக் கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்படி ஆசிரியர்களே அவரவரது சேவை, தகுதிக்கேற்ப உள்வாங்கப்பட்ட சம்பள திட்டங்களை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -157

## விமான இறகுப் பகுதி பார்வைக்கு

(வடமராட்சி)

வடமராட்சியின் பல பாகங்களிலும் விமானப் படையினரின் அவ்ரோவிமான இறகுப் பகுதி மக்கள் பார்வைககு வைக்கப்பட்டு வருகின்றது.

புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானத்தின் இறகுப்பகுதி வடமராட்சியின் பல பகுதியிலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு வருகின்றது, 51

## புதுவித காய்ச்சல்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, மணிப்புரி, வசந்தபுரம், வளன்புரம், துண்டி, அரியாலை பகுதிகளில் உள்ளவர்கள் தற்போது அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து ஒரு புதுவித காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக் காய்ச்சலால் சிறுவர், பெரியோர் அனேகர் பாதிக்கப்பட்டு வைத்தியாலைகளில் சிகிச்சைபெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. -154

## மாதாந்த கொடுப்பனவு

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவி பணம் பெறுபவர்களினதும், காச நோய், தொழு நோய், புற்று நோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் சித்திரை மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்தப் பகுதி தபாலகங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். 71

## புத்தகங்களை அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத்துறை சார்ந்த புத்தகங்கள் சஞ்சிகைகள் போன்றவற்றை வட-கிழக்கு மாகாணசபைக்கு அனுப்பி வைக்குமாறு புதுடில்லியில் உள்ள தென்கிழக்காசிய கூட்டுறவு நிறுவனப்பணிப்பாளர் திரு. சர்மாவுக்கு வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா கடிதமூலம் கேட்டுள்ளார். 160-சி

## பயிர்ச் செய்கை கடன்

(கொழும்புத்துறை)

விவசாய மேம்பாடு கருதி வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளவென வடமராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த 126 விவசாயிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மொத்தம் பதினொரு லட்சத்து எண்பத்தேழாயிரம் ரூபாவை அண்மையில் கடனுக வழங்கியுள்ளது. -154

## 30 பயனாளிகளுக்கு கடனுதவி

[யாழ்ப்பாணம்]

கைதடி லவனிதா குடியிருப்பில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் முயற்சியுள்ள 30 பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களை வழங்கியுள்ளது.

நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியின் கிராமிய நிதியத்தினூடாகவே ஒரு பயனாளிக்கு ஐயாயிரம் ரூபா வீதம் மொத்தம் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## கலை விழா

[ஆனைப்பந்தி]

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக தீவகப் பிரிவின் 'கலைவிழா' ஒன்று அண்மையில் வட்டுக்கோட்டை வள்ளியம்மை குடியிருப்பில் நடைபெற்றது.

கலைக்குழுத் தலைவர் திரு. கண்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தீவக கலை பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவுப்பொறுப்பாளர் செல்வி வினோ, வெளிக் கலைக்குழுத் தலைவர் திரு. ஜெயக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. -101

## சிவப்பு இல்லம் முதலிடம்

(நெல்லியடி)

நெல்லியடி மெதடிஸ்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் வ, கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

282 புள்ளிகளைப் பெற்று சிவப்பு இல்லம் முதலாமிடத்தையும், 232 புள்ளிகளைப் பெற்று மஞ்சள் இல்லம் இரண்டாமிடத்தையும், 188 புள்ளிகளைப்பெற்று பச்சை இல்லம் 3ம் இடத்தையும் பெற்றது. 160

## திருவிழா

(கொழும்புத்துறை)

மீசாலை ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத் திருவிழா கடந்த 11ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் ''கந்தபுராண'' தொடர் விரிவுரையைத் திரு. த.நாகேஸ்வரன் நிகழ்த்துவார். 154

# இனத்தின் முன்னேற்றம் எழுத்தறிவு, மொழியறிவில் தங்கியுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஒரு இனத்தின் மொழி வளரவேண்டுமானால் அதற்கென ஒரு நிர்வாக அமைப்பு இருக்க வேண்டும். இந்த இனம் உயர் கல்வி கற்றவர்களாகவும், உயர்கல்வியில் நாட்டம் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும். எழுத்தறிவு, மொழி அறிவு பெற்ற ஒரு இனத்தின் அபிவிருத்தி மேலோங்கி நிற்கிறது. மேற்குலக நாடுகள் பொருளாதாரத்தில் அதிக வளர்ச்சி பெற்றிருப்பதற்குக் காரணமாக அமைவது அவர்களின் கல்வி வளர்ச்சியும், அவர்கள் பெற்றிருக்கும் விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவுமேயாகும்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 15-வது ஆண்டுக் கம்பன் விழா இறுதி நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தனது தலைமையுரையில் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில்;

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது எமது நாட்டில் எழுத்தறிவு படைத்தவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். கேரளாவை எடுத்துப் பார்த்தால் அங்கு 90 சத வீத மானவர்கள் உயர்கல்வி பெற்றவர்களாக உள்ளனர். இவர்கள் இன்று உலகளாவிய ரீதியில் உயர் பதவிகளை வகித்து வருகிறார்கள். கனடா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் யாழ்ப்பாணத்து மக்கள் இன்று அதிக அளவில் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நாடுகளில் எல்லாம் எமது மொழியை வளர்த்தெடுப்பது ஒரு கஷ்டமான காரியமாகும்;

எமது மொழி வளர்ச்சி பெற வேண்டுமானால் எமது மக்கள் அதிக அளவில் பல்கலைக்கழகங்களில் இருக்க வேண்டும். உயர்கல்வி கற்றவர்களாக, கல்விமான்களாக இருக்கவேண்டும். பல்கலைக்கழகங்கள் மட்டத்திலேயே எமது மொழி வளர்த்தெடுக்கப்பட வேண்டும் நாம் எமது கல்வியை வளர்த்தெடுப்பதன் மூலம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் நிர்வாகம், வியாபாரம் போன்றவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியாக அமையும். கடந்த இரண்டாயிரம் வருடங்களாக இலக்கியம் வளர்க்கப்பட்டு வந்த போதிலும் இது இன்றுவரை நல்ல வகையில் வளர்ச்சிபெறவில்லை என்றே கூறலாம் என்றார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் இவ்விழாவின் தொடக்கவுரை நிகழ்த்துகையில், தமிழ் மொழியின் தொன்மை, செழுமை, கம்பனுடைய காவியத்தில் சிறப்பாக அமைந்திருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கம்பனுக்கு இன்று விழா எடுக்கப்படுவது என்றால் அவன் தமிழுக்குச் செய்த மகத்தான தொண்டு என்றே கூறவேண்டும் ஒரு கவிஞனைப் பற்றி அவருடைய ஆற்றல், திறமைகளை இன்னொரு கவிஞனாலேயே புரிந்துகொள்ள முடியும். கம்பனின் ஆற்றல்களை, அவனால் ஆக்கப்பட்ட கவிதைகளில் பொதிந்திருக்கும் அர்த்தங்களை பல கலைஞர்கள் பலவகையான நூல்கள் கட்டுரைகள் மூலம வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கம்பனுக்கு விழா எடுக்கப்படும் அதேவேளை சமகாலத்தில் அறிஞர் பெருமக்கள் கௌரவிக்கப்படுவது தொடர்ந்தும் நடைபெற வேண்டும் என்றும் தெரிவித்தார். 162 சி

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் இராஜராஜேஸ்வரன் தங்கராஜா. உபதலைவர்கள் கு கைலாயபதி, மு. யோகராஜா, செயலாளர் வ. பரமசிவம். உபசெயலர் க. விவேகானந்தன், பொருளாளர் நா. காசிவிஸ்வநாதன்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–05–16**

செவ்வாய் இரவு

8.02- ஊர்சுற்றும் ஒலிவாங்கி
8 10, அறிந்து கொள்ளுங்கள்
8.20- நலந்தானு - றாமற்றிக் காய்ச்சல் பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
8.30- செய்திகள்
8.40- கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''புலம்பல்கள்''
8.50- மலரும் மொட்டுக்கள்

**1995–05-17**

புதன் காலை

7 02- மாவீரவணக்கம்
7.15- நீங்கள் கேட்டவை
7 30- செய்திகள்
7·35- பத்திரிகைச் செய்திகள்
7 40- நீங்கள்கேட்டவைநிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–05–16**

செவ்வாய் மாலை

5.01- சிந்தனைச்சிதறல்
5.02- எழுச்சிகீதம்
5.10- புதியவை
5.15- தமிழிசை
5 30- வானொலி மதியூகம்-20
6.00- சிந்தனைக்குச் சுலவிஞடிகள்
6.02- இவ்வாரம் இவர்
6.15- விளையாட்டுச் செய்திகள்
6.20- என் தெரிவு
6.30- மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## மாணவர் ஒன்றுகூடல்

(உடுவில்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல நிகழ்வில் கல்விவலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு க. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மன்றத் தலைவர் செல்வி ம. சத்தியவாணி தலைமையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு சு. இரத்தினராசா, அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர். -109

## கலை நிகழ்ச்சி

(கொழும்பு)

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை கல்லூரியின் வளர்ச்சிக்காக கலைநிகழ்ச்சியொன்றை அண்மையில் கொழும்பு, மருதானை எல்பிஸ்டன் அரங்கில் நடாத்தியது.

இந்த கலை நிகழ்ச்சியில் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் திரு. காமினி பொன்சேகா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். -72

## அதிகளவு பப்பாசிப்பழம்

(அரியாலை)

யாழ் மாவட்டத்தில் இம்முறை அதிகளவு பப்பாசிப் பழங்கள் கடைகளிலும் சந்தைகளிலும் விற்கப்படுகின்றது.

பெரிய பழம் 5ரூபாவாகவும் சிறிய பழம் 3 ரூபாவாகவும் விற்கப்பட்டு வருகின்றது. -59

# இந்துமத குருமார் ஒன்றியத்தால் இந்து நூல்கள் வெளியீடு

(உடுவில்)

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியத்தினரால் நவக்கிரக பூஜாவிதானம். தைத்திரிய உபநிஷத் ஆகிய நூல்கள் வெளிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையில், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்துமதகுருமார் ஒன்றிய யாழ்ப்பாணத் தலைவர் ஐ. கேதீஸ்வரக்குருக்கள் வெளியீட்டுரையும், தென்மராட்சிக் கிளை பதில் தலைவர் கி. சோமசுந்தரக்குருக்கள் மதிப்புரையும் வழங்கினர்.

நூல் ஆய்வுரையை பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா நிகழ்த்தினர்.

நூலின் முதல் பிரதியை சாமி சுந்தரேசக் குருக்கள் பேராசிரியர்கோபாலகிருஷ்ண ஐயரிடமிருந்து பெற்றுக் கொண்டார். 109

# கரவெட்டியில் சித்த மருத்துவ தொண்டர் சேவை

(நெல்லியடி)

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் சுமார் நான்கு பகுதிகளில் சித்த மருத்துவ தொண்டர் சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

மாவடி வல்வெட்டித்துறை கரவெட்டி கிழக்கு குடவத்தை மாயக்கை ஆகிய இடங்களிலேயே இம்மருத்துவ தொண்டர் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் பல பகுதிகளில் இது விஸ்தரிக்கப்படுமென கலவி உத்தியோகத்தர் திரு ம. மகிழ்ராஜன் தெரிவித்துள்ளார். 160

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

**முக்கிய அறிவித்தல்**

கொழும்புத் தலைமையகத்தின் அறிவுறுத்தலின்படி எமது கிளையின் 1995ஆண்டுப் பொதுக்கூட்டமும், தேர்தலும் பிற்போடப்பட்டுள்ளது.

நன்றி;

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
13-5-1995.

(ஏ 4929)

**மணிவாக்கு**

அறியாமை ஆண்டவனின் சாபம்; அறிவோ விண்ணை நோக்கி நாம் பறக்கும் இறக்கை.
— ஷேக்ஸ்பியர்.

# நமது நோக்கு

## தேசிய சபை

வடக்கு — கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய தேசியசபையொன்றை அமைக்க வேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கோரிக்கை விட உள்ளதாக அதன் உறுப்பினர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்த முன்னணியின் தலைவரான திருமதி சிறிமானி அத்துலத்முதலியும் இந்த யோசனைக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக இந்த யுத்தம் நீடித்து வரும் போதும் இதுபோன்ற குழுவொன்று நியமிக்கப்படவில்லை என்று காரணம் வேறு கூறப்படுகின்றது.

பிரச்சனைத் தீர்வுக்கு ஏதோ பெரிய, புதிய 'கண்டுபிடிப்பு' ஒன்று வெளியிடப்பட்டதாக நாட்டு மக்கள் நம்பமாட்டார்கள்

ஏனெனில்- முன்னைய ஆட்சிக்காலத்தில், அத்துலத்முதலி அமைச்சராக இருந்த காலத்தில இதுபோன்ற பல சபைகள் அமைக்கப்பட்டும் பிரச்னை திரவில்லை என்பதனை மக்கள் மறந்தா விடுவார்கள்?

வட்டமேசை மாநாடு, சர்வகட்சிக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு போன்றவை எல்லாம் தேசிய சபை போன்றுதான் இயங்கிவந்தன என்பதை ஐ. ஐ. தேசிய முன்னணி வசதியாக மறந்துவிட்டதா?

கூடிப் பேசி, கலந்துரையாடி, தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்காது காலத்தை வீணடித்ததை நாட்டு மக்கள் மறந்தா விடுவார்கள்?

தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்கள். அன்றாடம் பல தொல்லைகள் அனுபவிப்பவர்கள். அவர்களின் அவலநிலையை நீக்காது, தொடர்ந்து வேதனைகள் அனுபவிக்கச்செய்ய, காலதாமதம் ஏற்படுத்தத்தான் இந்தத் தேசிய சபைக் குரல் எழுப்பப்படுகிறதா எனச் சந்தேகப்பட வேண்டியுள்ளது.

தீர்வுத்திட்டம் தயாராக உள்ளது என ஜனாதிபதி கூறிவருகிறார் பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வசிக்கும் ஐ. ஐ. தேசிய முன்னணிக்கு இத்திட்டம் பற்றிய விபரம் தெரியாதா?

தேசிய சபை அமைக்க முன், பொதுசன ஐக்கிய முன்னணி தனது கருத்து வேறுபாடுகளை நீக்கி. பொதுவான தீர்வுத் திட்டத்தைப் பரிசீலிப்பதே நாட்டுக்கு நன்மை தரும்!

குரக்கன் விதைத்திடு - தமிழ்க் குலத்தின் பசியினைப் போக்கிடு

# போர்நிலையிலுள்ள படையினருக்கு தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகள்

(கொழும்பு)

போர்முனையில் பணிபுரியும் இராணுவத்தினருக்கு தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த உணவு வகைகளை இரண்டு வருட காலத்துக்கு கெடாமல்வைத்து படையினர் பாவிக்கக் கூடியதாக இருக்கும்.

போர் முனைகளில் தாக்குதல்கள் ஏற்படும் சமயங்களில் படையினருக்கு தேவையான உணவுப் பொருள்களை விநியோகிப்பதில் தற்போது பல விதமான கஷ்டங்களையும், பின்னடைவுகளையும் அரசு எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதனைத் தவிர்க்கும் விதமாகவே அவர்களுக்கு இரண்டு வருடகாலம் வரை பாதுகாப்புடன்வைத்து பாவிக்கக்கூடிய உணவு வகைகளை தகரத்தில் அடைத்து வழங்குவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. -இ

## சுயதொழில் ஊக்குவிப்பு

(நெல்லியடி)

வடமராட்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால கரவெட்டி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அனுசரணையில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மகளிர் குழுவைச் சேர்ந்த பன்னிரண்டு யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்கென தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இவ்வைபவம் கடந்தவெள்ளிக்கிழமை காலை கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் நிகழ்ந்தது. -160

## இராணுவத்தினருக்கு கவசமாகச் சென்ற பெண் மிதிவெடியில் காலிழந்தார்

(கொழும்பு)

இராணுவத்துக்குக் கவசமாகச் சென்ற ஒரு பெண் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளார்.

கிழக்கில் மொறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாமிலிருந்து அரை மைல்தொலைவிலுள்ள ரயில் நிலையக்கடவைக்கு நேற்று முன்தினம் காலை ஏழு மணிக்கு ரோந்து சென்றஇராணுவத்தினருடன் கவசமாக பொதுமக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்தக் கூட்டத்தில் முதலாவதாகச் சென்ற பெண் மிதிவெடியில் சிக்கியதால் தமது கால்களை இழந்துள்ளார். -இ

## கன்னியாகுமரி ரயில் விபத்துக்குள்ளானது

### 33பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்ட கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் நேற்று முன் தினம் விபத்துக்குள்ளானது.

இதில் 33 பேர் உயிரிழந்தனர். 50க்குப்மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் நான்கு பேர் என்ஜின் சிப்பந்திகள்

மேற்படி ரயில் சரக்குரயில் ஒன்றுடன் மோதியதில் இந்த கோரவிபத்து ஏற்பட்டது.

சேலத்துக்கு அருகே இடம்பெற்ற இந்த விபத்தில் எட்டு பெட்டிகள் தடம் புரண்டன. மூன்று பெட்டிகள் தலைகீழாக கவிழ்ந்தன. -இ

## வேலைநிறுத்தம் காரணமாக தென்பகுதி ஆஸ்பத்திரிகள் முற்றாக ஸ்தம்பிதம்

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள ஆஸ்பத்திரிகளில் உதவி வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது,

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகள் இதனால் ஸ்தம்பிதமடைந்துள்ளன

இந்த ஆஸ்பத்திரிகளுக்கு சிகிச்சைக்காக வரும் ஆயிரக் கணக்கான நோயாளர்கள் இதனால் பெரும்பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்,

வெளிநோயாளர் பிரிவில் மருந்துக்காகவந்த பலநோயாளிகள் வெறுங்கையுடன் திரும்பியதைக் காணக்கூடியதாக உள்ளது

வேலைநிறுத்ததைமுடிவுக்கு கொண்டுவர உதவி வைத்திய அதிகாரிகளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசு அழைத்திருந்தும் இதுவரை அவர்கள் பேச்சுவார்த்தைக்குப் போகாதது இங்கு குறிப்பிடத்தக்கது. -இ

## அச்சுவேலி மருத்துவமனையில் பற்சிகிச்சை கிளினிக் நிறுத்தம்

(நெல்லியடி)

அச்சுவேலி அரசினர் மருத்துவமனையில் நடைபெற்ற பற்சிகிச்சை கிளினிக் கடந்த வார முதல் நிறுத்தப்பட்டது.

நிரந்தரமான பற்சிகிச்சை நிபுணர் இங்கு இல்லாதநிலை உருவாகியிருந்தபோதும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் பற்சிகிச்சை நிபுணரே தற்காலிகமாக இங்கு பணிபுரிந்துவந்துள்ளார்.

எனினும் பருத்தித்துறை அரசினர் மருத்துவமனையில் நிரந்தரமாக பற்சிகிச்சை நிபுணராக பணிபுரிந்த டாக்டர் விடுமுறையில் சென்றிருப்பதனால் வல்வெட்டித்துறை மாவட்ட பற்சிகிச்சை நிபுணரே ஒரு வாரத்தில் செவ்வாய், புதன், வியாழன், சனி ஆகிய நான்கு நாட்களும் இங்கு சேவைபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். 160

## பலதும் பத்தும்

### இரத்த அழுத்தம்

இதயம் இரத்தத்தை பமப் செய்து வெளியேற்றும்போது அழுத்தம் அதிகமாக இருக்கும். இதனைச் 'சிஸ்டோலிக' (Systolic) அழுத்தம் என்பர். திரும்பவும் இரத்தத்தை இதயம் நிரப்பிக்கொள்ளும் போது அழுத்தம் குறைவாக இருக்கும் இது 'டயஸ்ரோலிக்' (Diastolic) அழுத்தம் எனப்படும்.

இதனை அளக்கும் கருவிய 'ஸ்பைக்னோமனோமீட்டர்' கையைச் சுற்றிப் பட்டிகட்டி... ரப்பர் பந்தை அழுத்தும் போது... இரத்த ஓட்டம் பூரணமாகத் தடைபடும். துடிப்புகள் நின்றுவிட்டதை 'ஸ்டெதஸ்கோப்' மூலம் கண்டறிந்து காற்றை மெல்ல மெலத் திறப்பார் டாக்டர். சிஸ்டோலிக்' அழுத்தத்தை அடையும் போது துடிப்புகள் தொடங்கும். பாதரசம் காட்டும் அளவு குறிக்கப்படும்.

ஒருநிலையில் துடிப்புச் சத்தம் நின்றபோது காணப்படும் அழுத்தம் 'டயஸ்ரோலிக்' அழுத்தம் இதனையும் குறித்துக்கொள்ளுவார்.

வயது நாற்பதுக்கு மேலா...? சோதனை செய்து வைப்பது நல்லதல்லவா?

— மயூரன்

## அரச ஊழியர் சம்பள விவகாரம் சம்பள மீளாய்வுக்குழு இயங்க ஆரம்பித்துவிட்டது

(கொழும்பு)

ஜனாதிபதியால நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழு அரசாங்க ஊழியர்களின் சம்பள முறை பற்றி மறுபரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளதாக அரச உயர்மட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி பயிற்சிக்கல் லூரியில் இதற்கான நடவடிக்கைகளில் இந்தக் குழு ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்து வெளியிட விரும்புவோர் ஆணைக் குழுவுக்கு தமது கருத்துக்களை தெரிவிக்கலாமென்றும் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அரசாங்க சேவை, மற்றும் நீதிச்சேவை, சபைகள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின்தற்போதைய சம்பள முறை பற்றியும் மறுபரிசீலனை செய்வதற்கும் முடிவுசெய்யப்பட்டுள்ளதாம். க-இ

## இராசி பலன்

16-05-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு வைகாசி —02)

துதியை மு. இ: 9-57 வரை: அனுஷம் காலை 6-59 வரை: கேட்டை வைகரை 5-20 வரை சித்தாமிர்த யோகம், இராகுகாலம் மாலை 2-53 முதல் 4-23 வரை; சுபவேளை காலை 10-23 முதல் 11-53 வரை.

மேடம்: முயற்சி தாமதம், அசமந்த போக்கு, அலைச்சல்

இடபம்: கூடிக்குலாவுதல், மனமகிழ்ச்சி, சுபவிரயம்.

மிதுனம்: குடும்ப உறவு, தொழில் மேன்மை. பணப் புழக்கம்.

கடகம்: திடீர் சோகம், குடும்ப கவலை, அகால உணவு.

சிங்கம்: தாயார் வெறுப்பு, கடன்படல், மனச்சுமை.

கன்னி: தொழில் பாராட்டு சகோதரி பாசம், மனஉறுதி.

துலாம்: நோய் உபாதை, மனைவியால் துயர், காரிய தடை.

விருச்சிகம்: வெளியார் உபதேசம், வாக்குவன்மை. பயணம்,

தனுசு: கூனிக்குறுகுதல், மனவேதனை தாமத முயற்சி.

மகரம்: நண்பர் வருகை, விருந்துபசாரம். கலகலப்பு.

கும்பம்: மேன்மை நிலை, குடும்பசுகம், பழைய நட்பு.

மீனம்: வேலைப்பழு, மனைவி துயர், சினமடைதல்.

— ஜோஸ்யர்.

## இடம்பெயர்ந்தவர்கள் வீடுகளில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பெரியவிளான் பகுதியில் இடம் பெயர்ந்து சென்றவர்களின் வீட்டுக்கதவுகள் திருடப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கூரை ஓடுகளும் மற்றும் வீட்டு கட்டிடப் பொருட்களும் திருட்டுப் போயுள்ளதாக இடம் பெயர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் பெரிய விளானைச் சேர்ந்தவரும், நவாலியில் இடம் பெயர்ந்து வசித்து வருபவருமான செ செலவராசா என்பவரின்வீட்டுக்கதவுகள் திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 72-சி

## பாதிக்கப்பட்டோர் விபரம் சேகரிப்பு

(உடுவில்)

1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோர் விபரங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் பகுதியில் பாதிக்கப்பட்டோர் பெயர் விபரங்கள் பதிவு செய்யப்பட உள்ளன' பதிவுகள் மேற்கொள்ளப்பட உள்ள கிராமசேவையாளர்

(5-ம் பக்கம் பார்க்க)

# சந்திரிகா - வேடம் கலைந்த இரட்சகர்

ச. தியாகராசா

சந்திரிகா அம்மையார் கீழ்க்காணும் சுலோகங்களை முன்வைததுக்கொண்டு அரசியல் அரங்கில் கால்வைத்தார். அவையாவன. 1 ஊழல் ஒழிப்பு 2. வீண் விரயத்தவிர்ப்பு 3. ஊதாரித்தனமான செலவுகளை செய்யாது விடுதல் 4. நாட்டில் ஜனநாயகம் சமாதானம் வேண்டும் என்பனவாகும் இவையெல்லாம் ஒழிக்கப்பட்டு தவிர்க்கப்பட்டு நாட்டில் சமாதானம் ஏற்பட்டுவிட்டதா? இல்லை.

பதினேழுவருட ஐ. தே. கட்சியின் ஆட்சியில் இவை எல்லாம் இருந்ததுஉண்மையே அவைகள் இல்லாமல் செய்யப்படவேண்டுமென்பதும் அவசியமே ஆனால் இன்று உண்மையில் நடப்பதென்ன?

## பிறந்த தினம்

பிரதமர் சிறிமாவோவின் பிறந்ததினம் வானொலியிலும் தொலைகாட்சியிலும் மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக கொண்டாடப்பட்டது. நாலாம்கட்டப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட அரசதரப்புபிரதிநிதிகளை உடனடியாகசந்திக்கமுடியாத அளவுக்கு சந்திரிகாவின் மகளின் பிறந்ததினக் கொண்டாட்டம் முக்கியம் வாய்ந்ததாக அதுவும் நுவரெலியாவில் விழா எடுக்க வேண்டிய ஒரு முக்கிய விடயமாக இருந்தது.

## சுற்றுலா

ஜனாதிபதித் தேர்தலின் பின் உலகநாடுகள் சந்திரிகாவை ''21ம் நூற்றாண்டின் தலைவி'' என்றெல்லாம் வர்ணித்தன. அரசியல் தலைமைத்துவம் கிடைத்த குறுகியகாலத்துக்குள் கூடியளவு வெளிநாடுகளுக்கான சுற்றுப்பிரயாணங்களைச் செய்து சாதனையை நிலைநாட்டியுள்ளார்சந்திரிகா. ஓய்வெடுப்பதென்றால் மாலைதீவு. வேலைப்பளுவென்றால் காலாறுவது சிங்கப்பூர்.

## நிதி உதவி

வெளிவிவகாரங்களுக்கு உயர் அதிகாரிகளே போதுமென்றால் அவர்களே வெளிநாடுகள் செல்வது வழக்கம். ஆனால் தொட்டதற்கெல்லாம் சந்திரிகா தானே செல்வதெனத்திர்மானித்து விட்டார். ஜே, ஆரின் ஆட்சிக்காலத்தில் அல்லது பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டங்களுக்கு அவர்களே நேரடியாகச் சென்றதில்லை. ஆனால் சந்திரிகா தானே நேரடியாகச்சென்று தமது பக்கத்து நியாயத்தை முன்வைத்தார். அதிலும் மூக்குடைபட்டார். வடகிழக்கு அபிவிருத்திக்கு கடன் உதவிகோரினார். இன்று வடகிழக்கில் நடக்கும் யதார்த்த தளநிலையை எடுத்துக்காட்டவில்லை. ஆனால் உதவி வழங்கும் நாடுகள் என்ன முட்டாள்களா? அவர்கள் வடகிழக்கு அபிவிருத்திக்கு என்ற பெயரில் நிதிஉதவி வழங்க மறுத்துவிட்டனர் என்ற தகவ கள் இப்போது கிடைத்துள்ளன.

## விபத்து ஜனாதிபதி

ஐ. தே. கட்சியின் கொடுங்கோல் ஆட்சியில் ஆத்திரம் கொண்டு செய்வதறியாது இருந்தமக்களுக்கு குறிப்பாக ஜே; வி. பி. ஒழிப்பு என்ற சாட்டில் தென் சிறிலங்காவில் கூடுதலாக பல ஆயிரக்கணக்கில் கொலை செய்யப்பட்ட இளைஞர்களைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு ஒரு தலைமை தேவைப்பட்டது. இந்தவேளையில்தான் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளேயே தனது நிலை என்ன என்பது தெரியாது தத்தளித்த சந்திரிகா, எவ்விதம் டி,பி. விஜயதுங்கா ஒரு விபத்து ஜனாதிபதியானாரோ'' அவ்விதம் இன்னொரு விபத்தின் மூலம் மேல் மாகாணசபை முதல்வராக பதவியேற்றார். இத்தருணத்தில் தான் தென் சிறிலங்காவின் மாகாணசபைத் தேர்தலும் டி. பி. விஜயதுங்காவின் குளறுபடி அரசியல் நடவடிக்கையால் நடந்தது. இயற்கையாகவே புரட்சிமனப்பான்மை கொண்ட தென் சிறிலங்காவிலுள்ள மக்கள் சந்திரிகாவின் மாயத் தோற்றத்தை மையமாக வைத்து ஐ. தே. கட்சிக்கு எதிரான தமது எதிர்ப்பை செயலில் காட்டி ஐ. தே கட்சியை தோற்கடித்தனர் இது தனது கட்சிக்குள்ளேயே நிலையில்லா நிலையிலிருந்த சந்திரிகாவுக்கு கட்சியின் ஆதிக்கத்தை கைப்பற்ற உதவியது.

## கபடநாடகம்

ஒரு பிழை மேலும் பிழைகளுக்கு வித்திடும் என்ற வாசகத்துக்கேற்ப, டி. பி. விஜயதுங்கா தனது தப்புக்கணக்கின் காரணமாக பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டார். சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த சிறிலங்காவின் மக்கள சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரையும் மாக்சிசத்தை கைவிட்ட ஏனைய தோழமைக் கட்சியினரையும் பதவிக்கு கொண்டுவந்தனர். சந்திரிகா பிரதமரானார். ஜனாதிபதியாக வேண்டுமென்ற ஆவல் கொண்ட சந்திரிகா மேலும் மக்களைக் கவருவதற்காக சமாதானம், பேச்சுவார்த்தை என்ற கபட நாடகத்தை முன்வைத்தார். ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் வெஸ்ற்மினிஸ்ரர்பாங்கில் பிரதம மந்திரி ஆட்சியை கொண்டுவருவேன் என்றெல்லாம் கோஷமிட்டார். இவையெல்லாம் மக்களால் வரவேற்கப்பட்டது காமினி திசாநாயக்காவின் அகாலமரணமும் சந்திரிகாவுக்கு சாதகமாக அமைந்தது பெரும்பான்மை வாக்குகளால் சந்திரிகா ஜனாதிபதியானார்.

## வேடம் கலைகிறது

முன்னைய சிங்கள ஆட்சியாளர்களான ஜே ஆர், பிரேமதாசா, டி. பி. விஜயதுங்கா போன்றவர்களுக்கு எவ்விதத்திலும் குறையாத பேரினவாத, மகாவம்ச கோட்பாடுகளில் அசையாத பற்றும், ஆளுமை, தலைமைத்துவம், தீர்மானம் எடுக்கும் சக்தி போன்றவற்றுக்கு வெகு தொலைவிலும் உள்ள சந்திரிக்கா மெல்ல மெல்ல தனது வேடத்தைக் கலைக்கத் தொடங்கினார்.

## பின்னடிப்பு

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்திலேயே அரச தரப்பினரால் ஏற்றுக்கொண்ட வட-கிழக்கு மக்களின் சாதாரண இயல்பு நிலையை உருவாக்குவதற்கான வழிவகைகளை செய்த பின்னர்தான் அரசியல் பேச்சுகள் நடத்துவது என்ற நிலையிலிருந்து சந்திரிக்கா பின்வாங்கினார். வடக்கு-கிழக்கு மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இழுத்தடித்து பின்னர் கொடுத்த வாக்குகளை காப்பாற்றாது முற்றாகப் பின்வாங்கினார்.

ஜனாதிபதி முறை ஒழிப்பது என்பது எல்லாம் பொய்யாகி பழங்கதையாகப் போய்விட்டது. தேர்தல்களும் பிற்போடப்படுகின்றனதோழமை கட்சிகளும்விலகிக் கொள்ள மெதுவாகமுனைகின்றன.

## பொய் வேடம்

பிரேமதாசா பிரதமராக இருக்கும்போது ''பிரதமர் பதவிஜனாதிபதியின் தும்புக்கட்டு'' என்று கூறியிருந்தாரே யாயினும் ஒரு காலத்திலும் அதிகாரம் இழந்தவராக இருக்கவில்லை ஜே ஆர். கூட பிரேமதாசாவுக்குப் பயம். ஆனால் சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்துகொண்டு இராணுவம் தன் சொல்லைக் கேட்க மறுக்கிறது என்று கூறுகிறார். இதிலிருந்து, தான் திறமையற்றவர் என்பதைத்தானே பிரகடனப்படுத்துகிறாரா அல்லது இதுவும் ஒரு வேடமா? இராணுவத்தில் குறை கூறிக்கொண்டு தான் விரும்பும் இராணுவத் தீர்வை நடைமுறைப்படுத்த எடுக்கிற ஒரு தந்திரோபாயமாகத்தான் இதைக் கொள்ளவேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் பார்ப்போமேயானால் சந்திரிக்காஒரு வேடம் தாங்கிய இரட்சகர். ஆனால் அவருடைய இயலாத் தன்மையாலும் இயல்பாக உள்ள அவருடைய அகங்காரப் போக்கினாலும் வேடம் படிப்படியாக கலைந்து கொண்டு இருக்கிறது. இவை அவருடைய பேச்சுகளிலும், கொடுக்கும் செவ்விகளிலும் அவர் உபயோகிக்கும் பண்பற்ற வார்த்தைகளிலும் தெளிவாக தெரிகின்றது. -சி

---

# தமிழ், இந்து நாகரீகம் முன்னோடிப் பரீட்சை

(திருநெல்வேலி)

க. பொ. த. உயர்தரம் 1995 ஆகஸ்ட் பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்களின். நன்மை கருதி ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தினரால் தமிழ், இந்து நாகரிக பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளது. இப் பரீட்சைக்காக பாடசாலை அதிபர்கள்விண்ணப்பங்களை பூர்த்திசெய்து கல்வித்திணைக்களத்தினூடாகஅனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சை நடைபெற்று விடைத்தாள் மதிப்பிட்டு பெறுபேறு அறிவிக்கப் படுவதுடன் விடைத்தாள்கள் மாணவர் மீள்பார்வை செய்ய வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. 157 - சி

# கிளினிக் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

கடந்த இருவருட காலமாக கந்தரோடையில் செயற்பட்டு வந்த தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்திய சாலையின் வைத்திய சிகிச்சை (கிளினிக்) நிலையம் இம்மாதம் தொடக்கம் மல்லாகம் சந்திக்கு அருகாமையிலுள்ளகட்டிடத்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 72.இ

# சங்கானை கல்விக்கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள்

(வட்டுக்கோட்டை)

சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் நாளை 17, 18, 19, ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தினமும் பிற்பகல்2 மணி முதல் சங்கானை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டி நிகழ்ச்சிகளுக்கு இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் ப.சண்முகராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். 139-இ

# மாணவரை வழிநடத்த கட்டுரைப் போட்டிகள்

(உடுவில்)

புகைத்தல், மது அருந்தல், மற்றும் மது போதைகள் பாவனைகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களை வழி நடத்தும் நாடளாவிய ரீதியிலான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, சுவரொட்டிப் போட்டி, நடனப்போட்டி போன்றனவற்றை நடத்த கல்வி உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சு சுகாதார அமைச்சின் புகைத்தல் மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய கமிட்டியின் அனுசரணையுடன் போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்க இருப்பதாக வடக்கு கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு க. தியாகராசா அறிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படும் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் முதல் மூவர் பின்னர் மாகாண மட்ட போட்டி, தேசியமட்ட போட்டிகளில் பங்கெடுப்பர்.

தேசிய ரீதியான போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெறுவோருக்கு கட்டுரை போட்டிக்கு முறையே 3000, 2000, 1000 ரூபாவும் 4 முதல் 10 வரை ஆறுதல் பரிசாக 500 ரூபாவும் வழங்கப்படும்.

பேச்சுப் போட்டிக்கு முறையே 3000, 2000, 1000 ரூபாவும் 4 முதல் 7 வரை ஆறுதல் பரிசாக 500 ரூபாவும் வழங்கப்படும்.

சுவரொட்டிப் போட்டிக்கு முறையே 5000, 3000, 2000 ரூபாவும் 4 முதல் 10 வரை ஆறுதல் பரிசாக 1000 ரூபாவும் வழங்கப்படும்.

நடனப் போட்டிக்கு முறையே 20,000, 5000, 3000 ரூபாவும், 4 முதல் 7 வரை ஆறுதல பரிசாக 1000 ரூபாவும் வழங்கப்படும்.

மேலும் தேசிய மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் முறையே 1500, 1000. 500 ரூபா பரிசாக வழங்கப் படும். -109

# இளம்பெண் தடுத்து வைப்பு

(நெல்லியடி)

பிரான்ஸில் பணிபுரியும் வடமராட்சியைச் சேர்ந்த இளைஞரை திருமணம் செய்ய கொழும்புக்கு சென்ற உடுவில் பகுதி இளம் யுவதி ஒருவர் விடுதியில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டு தற்பொழுது நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன் இசச்ம்பவம் கொழும்பில் நிகழ்ந்துள்ளது. 160-சி

# 41,000கோழிகளுக்குநோய்த் தடுப்பூசி

(உடுவில்)

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நாற்பத்தோராயிரத்துக்கும் அதிகமான கோழிகளுக்கு கால்நடை வைத்தியர் பிரிவுகளூடாக நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

கோழிகளுக்கு கொள்ளை நோய் வராதிருக்க ரனிக்கட் தடுப்பூசியும். கோழி அம்மை தடுப்பூசியும் போடப்பட்டன. சுமார் 2300 மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியும் போடப்பட்டது.

ஒவ்வொரு கால்நடைவைத்தியர் பிரிவுகளிலும் கோழிகள் மாடுகளுக்கான இலவச தடுப்பூசிகள் மாதம் தோறும் போடப்பட்டு வருகின்றன.

தடுப்பூசி போடும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன. 109

# வேலணை ஊர்காவற்றுறை கோட்ட மெய்வல்லுநர் போட்டி

(ஆனைப்பந்தி)

வேலணை, ஊர்காவற்றுறை கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான இவ்வாண்டின் கோட்டமட்ட மெய்வல் லுநர் போட்டி இம்மாதம் 18 ம், 19 ம் 20 ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

18 ம் திகதி வேலணைக் கோட்டத்திற்கான போட்டியும், 19 ம் திகதி ஊர்காவற்றுறைக் கோட்டத்திற்கான போட்டியும் நடைபெற்று 20 ம் திகதி இரு கோட்டங்களுக்குமிடையிலான போட்டி நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. 110 - சி

# குடிசைகள் ஒழுக்கு தீவக மக்கள் அவதி

(ஆனைப்பந்தி)

தீவக மக்கள் தங்கியுள்ள யாழ். யுகையிரத நிலைய முகாமில் (ஸ்ரீபன் குடியிருப்பு) குடிசைகள் ஒழுக்கு நிறைந்தவையாகையால் மழை நாட்களில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

தனித் தனி குடிசைகளில் சுமார் ஐம்பத்தைந்து கடந்த இரண்டரை வருடங்களாக வேயப்பட வில்லை யென அறியப் படுகிறது.

இதனால் மிக மோசமான நிலையில் காணப்படும் குடிசைகள் சிறு மழை பெய்தால் கூட சேறும் சகதியுமாய் மக்கள் இருப்பதற்கே இடமில்லாதவாறு ஆகிவிடுகின்றன. 101இ

## மாணவரிடையே கட்டுரை, கவிதை விஞடிவிஞ போட்டி

(உடுவில்)

மாணவர்களின் ஆக்கத் திறன்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சாளரம் சஞ்சிகையினர் தமது நான்காவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, ஓவியம், விஞடி விஞ, கவிதை ஆக்கம் போன்ற போட்டிகளை நடத்த உள்ளனர்.

மேற்படி போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடைபெறும். முதல் பிரிவில் ஆண்டு 6, 7, 8 பிள்ளைகளும், இரண்டாம் பிரிவில் ஆண்டு 9, 10. 11 பிள்ளைகளும் மூன்றும் பிரிவில் ஆண்டு 12, 13 பிள்ளைகளும் பங்குபற்றுவர்.

மேற்படி போட்டிகளை மாட சாலை மட்டத்தில் நடத்தி முதல் மூன்று இடங்கள் பெறுவோரை கோட்ட மட்டபோட்டியில் பங்குபற்ற செய்வதற்காக மே மாதம் 25ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு சாளரம் நிர்வாகி திரு. மா. சங்கிதரன் அறிவித்துள்ளார்.

கோட்ட மட்ட போட்டிகள் ஜூன் 5ஆம் திகதிக்கு முன் நடைபெறும் எனவும் கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கான சான்றிதழ்கள் பரிசுகள் சளாரம் நான்காவது ஆண்டு நிறைவு விழாவில் வைத்து வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார், 109

## மனிதாபிமானமற்ற முறையில் கைதிகள் நடத்தப்படுகின்றனர்

(கொழும்பு)

விளக்க மறியற் கைதிகள் இலங்கையில் மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்படுவது குறித்து மனித உரிமை இயக்கங்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

விளக்க மறியற் கூண்டை விட்டு வழக்கு விசாரணைக்காக இவர்கள் நீதிமன்றம் கொண்டு செல்லப்படும் முறைகள் பெரும்பாலும் மனித உரிமைகளை மீறிய மனித மனதைப் புண்படுத்தக்கூடிய அடாவடித்தனமான செயலாக அமைகின்றன என இந்த இயக்கங்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

நீதிமன்ற விசாரணைகளில் இறுதித்தீர்ப்பு வழங்கப்படும் வரை அவர்களைக் குற்றவாளிகள் எனக்கருத முடியாது எனவும் அதுவரை அவர்கள் மனிதாபிமானமாக நடத்தப்பட வேண்டியது கட்டாயமானது எனவும் மனித உரிமைகள் துறை உயர் அதிகாரியான திரு. லால் ஹேமந்த மாவலகே தெரிவித்துள்ளார்.

கைவிலங்கு கால் விலங்கிடப்பட்ட நிலையில் விளக்க மறியற் கைதிகளை தெருக்களில் நடத்திச்செல்வது, போதிய இட வசதி அற்ற வாகனங்களில் அவர்களை ஏற்றிச் செல்வது போன்ற இழிவான செயல்கள் நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டியவை எனவும் திரு. ஹேமந்த குறிப்பிட்டார். -தீ

## தீவகப் பாடசாலைகள் இல்லவிளையாட்டு போட்டி முடிவுகள்

(ஆனைப்பந்தி)

கடந்த 12ம், 13ம் திகதிகளில் நடைபெற்ற தீவகப் பாடசாலைகள் இரண்டின் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்:

1ம் இடம்: பாரதி இல்லம் (சிவப்பு) 355 புள்ளிகள். 2ம் இடம்: சயம்பு இல்லம் (பச்சை) 306 புள்ளிகள். 3ம் இடம்: நடராஜா இல்லம் (நீலம்) 252 புள்ளிகள்.

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம்:

1ம் இடம்: இளங்கோ இல்லம் (நீலம்) 330 புள்ளிகள், 2ம் இடம்: பாரதி இல்லம் (மஞ்சள்) 315 புள்ளிகள் 3ம் இடம்: வள்ளுவன் இல்லம் (பச்சை) 218 புள்ளிகள், 4ம் இடம்: கம்பன் இல்லம் (சிவப்பு) 211 புள்ளிகள்.

[101-இ]

## ஜம்மு காஷ்மீர் பிரச்சினையால் இந்திய பாகிஸ்தான் உறவுகள் முறியக்கூடாது — பிரணப் முகர்ஜி

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீரில் ஷராரே ஷெரிப் பள்ளிவாசல் தீ வைப்புச் சம்பவம் இந்திய - பாகிஸ்தான் உறவுகளை பாதிப்படையச் செய்வதற்கு காரணமாக அமையக் கூடாதென மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. பிரணப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

நிபந்தனைகள் எதுவுமின்றி இருதரப்பு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்த இந்தியா தயாராயிருப்பதாகவும் திரு. முகர்ஜி தெரிவித்துள்ளார்.

கல்கத்தாவில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளையில் இந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பெரும் குழப்பம் விளைவிக்க பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டு வருவதாக பாரதீய ஜனதாக்கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் திரு. கே. எல். சர்மா தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசல் தீவைப்பு சம்பவம் உலகின் கவனத்திற்கு கொண்டுவரப் படவேண்டும் என்றும் பாகிஸ்தானுக்கு கடும எச்சரிக்கையுடன் கூடிய கடிதமெழுதப்படமேண்டும் என்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் தீவிபத்துக்குள்ளான ஷராரே ஷெரீப் பள்ளிவாசலை மீண்டும் கட்டித் தருவதென்ற இந்தியாவின் வாக்குறுதியை காஷ்மீர் தீவிரவாதிகள் நிராகரித்துள்ளனராம். -க

## வெளிச்சம் நாளை வெளிவருகின்றது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் மாத வெளியீடான வெளிச்சம் கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் நாளை வெளிவருகின்றது.

இந்த இதழ் தமிழீழத்தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய "சலுகைகளுக்காக எவரிடமும் நாம் கைநீட்ட மாட்டோம்" என்ற கருத்துக்களையும், பிரம்மஞானியின், அபத்தமும் அர்த்தமும், கட்டுரைத் தொடரும் ப. புஸ்பரட்ணம், சபா. ஜெயராசா, அடேல் ஆன். சு. சங்கிலிகுமாரன் ஆகியோரின் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

மேலும், ஓவியர் தயாவுடனை நேர்காணலுடன்புதுவை இரத்தினதுரை. சோ. பத்மநாதன்' அடம்பனூர் செ திருமாறன் கருணைரவி, அலெக்ஸ் பரந்தாமன், வேலணையூர் சுரேஸ், மாலிகா, ஆகியோரின் கவிதைகளும் நாக. பத்மநாதனின் உருவகக் கதை 'ஒன்றும், சத்துருக்கன்: சத்தியமூர்த்தி ஆகியோரின் சிறுகதைகளும். பிரகலாத ஹேந்தின் கடிதமொன்றும் சாந்தனின் மொழி பெயர்ப்பிலான ஒரு வியட்நாமியக் கவிதையும் மற்றும் பல அம்சங்களையும் தாங்கி இந்த இதழ் வெளிவருகின்றது.

## கண்டெடுக்கப்பட்டது

மன்னார் 2ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த செல்வி நிஷாந்தி சுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டையும், யாழ். பல்கலைக் கழக அடையாளஅட்டையும், மன்னார் தீவு அனுமதிப்பத்திரமும், வடபகுதிக்கு நுழைவோருக்கான அனுமதிச் சீட்டும கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## ஒருமாத காலப்

[1ம் பக்கத்தொடர்ச்சி]

கிழக்கில் விடுதலைப் புலிகளின் பலத்தை முறியடித்து விடலாம் என நினைத் அரச படையினர் தற்போது அங்கு தினமும் பெரும் அழிவைச் சந்தித்து வருகிறார்கள். இதனால் படையினரின் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாக வும் கூறப்படுறது. [சி]

## 16 அப்பாவிப்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் யாவரும் புலிகள் எனத் தெரிவித்ததாக வெரித்தாஸ் தெரிவித்தது.

அண்மையில் புல்மோட்டையில் படையினர் பலர் கொல்லப்பட்டதை தொடர்ந்து அங்கு வந்த படையினர் நான்கு முஸ்லிம்களை சுட்டுக்கொன்றதும் தெரிந்ததே. - சி

## காங்கேசன்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காவலரண்களில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வடக்கு-கிழக்கு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது, க-சி

## கிழக்கையாவது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவமும் கருதுகின்றன என்றும் வவரித்தாஸ் தெரிவித்தது.

இதன் செயற்பாடாகவே கிழக்கு மாகாணத்தில் படையினர் பெரும் எடுப்பில் இராணுவ நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது, ஆனல் இந்த முயற்சியில் இராணுவம் தீவிரமாக இருந்தபோதும் தினமும் இராணுவ தரப்பில் பெரும் இழப்பு ஏற்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கே சி

## தெற்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புச் சாதனங்கள் ஆற்றவேண்டிய பங்கு பற்றி வெகுஜனத் தொடர்புச் சாதன அமைச்சர் திரு. தர்மசிறி சேனநாயக்க பத்திரிகையாளர்களுடன் எதிர்வரும் 17ம் திகதி முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார். இச்சந்திப்பின்போது பத்திரிகைகள், தொடர்புச் சாதனங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

மேலும் இனக் கலவரத்தைத் தூண்ட முயலும் தீய சக்திகள் குறித்துப் பத்திரிகைகள் மக்களுக்கு எச்சரிக்க வேண்டும் எனவும் அரசு பத்திரிகை நிறுவனங்களைக் கேட்டுள்ளது. சி

## திருமலை கல்லாறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் முகாமுக்கு தப்பி ஓடிவிட்டனர், இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லையென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் ஆர். பி. ஜி. 1, ஏ. கே எல். எம். ஜி- துப்பாக்கிகள் - 2, 60 மி. மீற்றர் பிஸ்டல் 1, 40 மி. மீற்றர் பிஸ்டல் 1, ரி 56 இரண்டு ரக துப்பாக்கிகள் - 5, ரி 56 ஒன்று ரக துப்பாக்கிகள் - 4, ரி 81 ரகத்துப்பாக்கி - 1, ரி 56 பட்மொடல் துப்பாக்கிகள் - 2, ஆர். பி. ஜி எறிகணைகள் - 3, ஆர். பி ஜி. புறப்பினர்கள் - 3. ஏ. கே. ரவைக் கூடுகள் - 67, ஏ. கே எல். எம். ஜி. தொடர் ரவைகள் - 1000, நடுத்தர ரவைகள் 4093, 60 மி. மீற்றர் எறிகணைகள் - 12. 40 மி. மீற்றர் எறிகணைகள் - 5, கிளைமோர் - 1, 60 மி. மீற்றர் பூஸ்டர் பெட்டிகள் - 2, 60 மில்லி மீட்டர் பராலைட் -2, 40 மில்லி மீட்டர் பராலைட் -3, ஏ 200 ரக கைக்குண்டுகள் - 35, வெடிக்கவைக்கும் சாதனம்- 1, வயர் ரோல் -1, இராணுவ சப்பாத்துகள் -7 சோடி, தண்ணீர் தாங்கிகள் - 4, ஏ. கே. எல். எம். ஜி. தாங்கி அணிகள் - 2. ஏ. கே. ரவைக்கூடு தாங்கி அணிகள் -14, மழைக் கவசம் - 4, இராணுவப் பைகள் -13 ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். (வி சி)

## மூன்று மோதல்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லெப். கருப்கதிர் [ஏகாம்பரம் முத்துலிங்கம் - மட்டக்கதிப்பு], லெப். சுமந்தன் [கந்தசாமி ஹ்ரிகரன் - கிளிநொச்சி) லெப். குமணன் ]தம்பிப்பிள்ளை முரளி - மட்டக்களப்பு), லெப். தர்மராசா [முத்துக்குமார் சிவகுரு - வவுனியா), வீரவேங்கை நவநீதன் [பாலசுந்தரம் சுவர்ணதாசன் யாழ்ப்பாணம்), வீரவேங்கை பகிலன் [கந்தசாமி சிவதீபன்) வீரவேங்கை மணியரசன் (துரைராசா கிருஷ்ணரூபன்], வீரவேங்கை இராசபாரதி [விஜயரத்தினம் கேந்திரமாறன் - முல்லைத்தீவு].

நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்ற நேரடி மோதலில் மேஜர் காளி [கந்தசாமி மனோகரன் - முளங்காவில்], கப்டன் பூங்காவனம் [ராமசாமி ராசகுமார் சிலாபத்துறை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்.

கடந்த 6ம் திகதி திருமலை இம்பிறுப்பிட்டிப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரவேங்கை சுடரன் அல்லது தீபன் [பரமசாமி பகிரன்- யாழ்ப்பாணம்] வீரச்சாவடைந்தார் -வி

## இஸ்ரேலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவியை வழங்குமாறு அவசர கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் அமெரிக்கா, பிரிட்டன் கனடா உட்பட பல நாடுகள் இலங்கைக்கு நேரடியாக இராணுவ உதவிகளை வழங்க மறுத்ததுடன் மட்டுப்படுத்தப் பட்ட இராணுவ தளபாட உதவியையே வழங்க முன்வந்துள்ளன. இந்தியாவும் ராணுவத்தினரை அனுப்ப மறுத்துவிட்டது.

இந்நிலையில் இதுவரை இஸ்ரேலின் உதவியை நாடாதிருந்த இலங்கை வேறுவழியின்றி இஸ்ரேலின் உதவியை நாடியது. அதற்கு இஸ்ரேலும் பச்சைக்கொடி காட்டியுள்ளதுடன் இலங்கைப் படையினருக்கு அவசரமாக தேவைப்படும் இராணுவதளபாட உதவிகுறித்து இலங்கையுடன் தொடர்பு கொண்டுள்ளது.

மேலும் இது குறித்து விரிவான பேச்சுக்களை நடாத்த இலங்கைப்படை அதிகாரிகள் குழுவொன்று அடுத்த ஓரிரு தினங்களில் இஸ்ரேல் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது -சி

## வெசாக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தில் கொழும்பில் தாக்குதலை நடாத்தலாம் அல்லது வெடிகுண்டுகளை வெடிக்க வைக்கலாம் என்ற அச்சமே வெசாக் தினம் கலகலப்பாக காணப்படாதற்கு காரணம் என செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலும் பிரதான நகரங்களிலும் பொலிசார் பாதுகாப்பை தீவிரப்படுத்தியிருந்தனர். வீதித்தடைகள் போடப்பட்டு சகல வாகனங்களும் சோதனையிடப்பட்டன. இதனால் போக்கு வரத்து தடைப்பட்டதோடு சில இடங்களில் நெரிசலும் ஏற்பட்டன.

வெசாக் தினத்தையொட்டி நேற்றும் நேற்று முன்தினமும் விடுமுறையாகஇருந்தபோதும் சிங்கள மக்கள் வழமைபோல் வெசாக் பந்தல்களை பார்க்க வென அதிகம் கூடவில்லையென்றும், அதிகமானோர் வீட்டிலேயே முடங்கி விட்டனர் என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது. கே-சி

## பாதிக்கப்பட்டோர்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுகளும் திகதிகளும் பின்வருமாறு. சுன்ஞகம் கிழக்கு யா/197- கிராமசேவையாளர் அலுவலகம் 16ம் திகதி சுன்ஞகம் மத்தி யா/198 கிராம சேவையாளர் அலுவலகம் இம் மாதம் 17. 18 ஆம் திகதிகள் பதிவுகள் காலை 8-30 மணி முதல் நடைபெறும் எனவும் பதிவுகள் மேற்கொள்ள வரும்போது அடையாள அட்டை, குடும்ப அட்டை எப். ஆர்:சி கார்ட்போன்றவற்றை எடுத்து வருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது, 109

# புதிய பாடத் திட்டத்திற்கமைய 97 உயர்தரப் பரீட்சை நடைபெறும்

(கொழும்பு)

1997ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உயர்தர) பரீட்சை புதிய பாடத் திட்டத்திற்கமையநடைபெறுமென கல்வி அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவ் அதிகாரி மேலும் தெரிவிக்கையில்; அடுத்த வருடத்திலிருந்து புதிய பாடத் திட்டத்திற்கமைய பாடங்களை போதிப்பது என ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக க.பொ த. (உயர்தர) பரீட்சை பாட விதானங்கள் மாற்றியமைக்கப்படாத நிலையில் பழைய முறையே பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

புதிய பாடத் திட்டத்தின் படி 47 பாடங்கள் க பொ. த (உயர்தர) பாடத்திட்டத்தில் அடங்கும்.

இதேவேளை ஆண்டு 1 முதல் ஆண்டு 4 வரையிலான பாடத்திட்டங்களும் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார். (க சி)

# மண்ணெண்ணைக்கு மீண்டும் கட்டுப்பாடு

[கொழும்பு)

வடபகுதிக்கு மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதற்கு அரசு மீண்டும் கட்டுப்பாடு விதித்துள்ளது

வடபகுதிக்கான மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டை அரசு முன்னர் நீக்கியிருந்தது தெரிந்ததே.

இப்போது இந்தக்கட்டுப்பாடு மீண்டும் கொண்டு வரப்பட்டிருப்பதாக கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய கட்டுப்பாட்டின்படி வடபகுதிக்கு பிரயாணிகள் இனிமேல் இரண்டு லீற்றர் மண்ணெண்ணையைமாத்திரமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இ-சி

# புனர்வாழ்வு அமைச்சகத்தினுள் வெளியார் செல்ல தடை விதிப்பு

[கொழும்பு]

புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சக கட்டிடத்தினுள் வெளியார் செல்வற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த அமைச்சக கட்டிடத்தினுள் வெளியார் செல்வதற்கு அனுமதிப்பதில்லையென புனர்வாழ்வு. புனர்நிர்மாண அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் தற்போது இந்த அமைச்சகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்றே ஏனைய அமைச்சக கட்டிடங்களுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு அங்கு செல்வோர் மிகத் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புனர்வாழ்வு புனர்நிர்மான அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பினதும் அந்த அமைச்சக உடர் அதிகாரிகளினதும் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. சி

# முன்னாள் இராணுவதளபதி உடுகம காலமானார்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் றிச்சார்ட் உடுகம காலானார்.

1949 இல் இராணுவத்தில் சேர்ந்த உடுகம 1963-ம் ஆண்டு இராணுவ தளபதியானார்.

மாத்தளைத் தொகுதியில் நாடாளுமன்ற உறுபபினராகவும், ஈரானுக்கான இலங்கை தூதுவராகவும் இவர் பணியாற்றினார்.

1966-ம் ஆண்டு இராணுவத்திலிருந்து ஒய்வுபெற கட்டாயப்படுத்தப்பட்டார், அரசாங்கத்திற்கு எதிரான சதி முயற்சி குற்றச் சாட்டின் பேரில் 1966-ம் ஆண்டு யூலை மாதம் சி ஐ. டியினரால் கைது செய்யப்பட்டு பின் 1969 செப்ரம்பர் மாதம் விடுதலையானார். கே-சி

# ஆயுதக் கொள்வனவிற்காக

## படை அதிகாரிகள் 5 நாடுகளுக்கு பயணம்

[கொழும்பு]

இலங்கைப் படையினருக்கு அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படும் இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஐந்து நாடுகளுக்கு இலங்கைப் படை அதிகாரிகள் சென்றுள்ளனர்.

ரஷ்யா, உக்ரேயின், இந்தோனேஷியா, சீனு, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கே இந்தக் குழுக்கள் சென்றுள்ளன. இவை முப்படைகளுக்கும் தேவையான இராணுவத் தளபாடங்கள் குறித்து, அந்தந்த நாட்டுப் படை அதிகாரிகளுடனும், தனியாா ஆயுத நிறுவனங்களின் அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடாத்தி வருகின்றன.

இந்த அதிகாரிகள் நாடு திரும்பியதும், இராணுவத் தளபாடங்களும் இலங்கை வந்து சேருமெனத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத் தளபாடங்கள் வந்து சேர்ந்ததும், படையினர் வடக்கு-கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிப்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சி

# படையினரின் குடும்பங்களுக்கு பல்வேறு வசதிகள்

[கொழும்பு]

தற்போது யுத் முனையில் பணிபுரியும் படையினர் குடும்பங்களின் நலனுக்காக அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்படவேண்டிய அவசரத் தேவைகள் மற்றும் ஏனைய வசதிகள் குறித்துத் தற்பொழுது உள்ளதைவிடக் கூடுதலான கவனம் செலுத்துமாறு ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனுதிபதி செயலகத்தின் பொதுமக்கள் தொடர்புப் பணியகத்திடம் இந்த அவசரப் பணிப்புரையை அவர் விடுத்தார்.

ஜனுதிபதியின் பணிப்புரைக்கமைய அனுப்பபடும்கோரிக்கைகளை ஜனுதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு படையினரின் குடும்பங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

கே சி

# நேற்றும், நேற்று முன்தினமும் தபால்கள் விநியோகிக்க அனுமதிக்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

'லங்கா முடித்த' கப்பலில் வந்த தபால்களை விடுமுறை நாட்களான நேற்றும் நேற்று முன்தினமும் விநியோகிப்பதற்கு யாழ். பிரதம தபாலகத்திற்கு அனுமதி வழங்க வடமாகாண அஞ்சல் திணைக்களம் மறுத்துவிட்டது.

இதனுல் தபால்கள் விநியோகிக்கும் வேலைகள் இவ்விருநாட்களிலும் இடம்பெறவில்லை.

வழமைபோன்று இன்று செவ்வாய்க்கிழமை முதல் வெளியூர் தபால்கள் விநியோகிககப்படும் என்றும் யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 170-சி

# தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினுல் நடாத்தப்படும் மாவட்ட ரீதியிலான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்றைய விளையாட்டாக இணுவில் சந்தை மைதானத்தில பி. ப. 3-30 க்கு சுன்னுகம் கலைவாணி விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4-00 மணிக்கு தையிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் எதிர் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகரும் விளையாடவுள்ளன. [சி]

# ஷெல் தாக்குதல்: பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு இராணுவத்தினர் மேற்கொணட ஷெல் தாக்குதலினுல் முள்ளியானைச் சேர்ந்த வேலாயுதம் பாக்கியவதி என்பவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்றது. 170 சி

# மருத்துவபீட

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

துவபீட மாணவர்களுடன் யாழ். போதனு வைத்திசாலை அரச வைத்திய அதிகாரிகள் சம்மேளனம் நடாத்திய பேச்சுவார்த்யை அடுத்து உண்ணுவிரம் நேற்றுக் காலையுடன் இடைநிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை ஆராய்ந்து பரிசீலிப்பதற்காக வைத்திய நிபுணர் டாக்டர் ஆனந்தராசா தலைமையில் ஒன்பதுபேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் டாக்டர் எஸ். ஆனந்தராஜா [தலைவர்], பேராசிரியர் எம். சிவசூரியர், டாக்டர் எம். கணேசரட்னம், பேராசிரியர் டி. ஜே. சோமசுந்தரம், டாக்டர் திருமதி ஜே. கணேசமூர்த்தி, டாக்டர் என். சிவராஜா மற்றும் யாழ். அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் பிரதிநிதிக்கும் மூன்று உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர்.

இக்குழுவினர் எடுக்கும் முடிவுகள், தீர்மானங்களை பல்கலை மாணவர்களுக்கு உடனே தெரிவிப்பதோடுபல்கலைக்கழக துணைவேந்தருக்கும் அறிவிக்கும். ஒருமாத காலத்துக்குள் இதற்கு ஓர் முடிவு காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 10ம் திகதி புதன் கிழமை தொடக்கம் நேற்று வரை இரண்டு கட்டமாக மொத்தம் 11 மருத்துவபீட மாணவர்கள் உண்ணுவிரதம் இருந்துவந்துள்ளதும் தெரிந்ததே. (170 சி)

# கொழும்பில் பயணிகள் கப்பலுக்கான பயணச்சீட்டுப் பெறுமிடம் மாற்றம்

(கொழும்பு)

திருமலை - பருத்தித்துறைக்கிடையிலான பயணிகள் கப்பலுக்கான பிரயாண அனுமதிச் சீட்டுகள் கொழும்பில் இனிமேல் கொள்ளுப்பிட்டியிலுள்ள ரேபியா கூட்டுறவு நிலையத்தில் வைத்தே வழங்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சக கட்டிடத்தில் வைத்து இதுவரை காலமும் இப்பிரயாண அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டு வந்தது. தற்போது பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்த இடம் மாற்றப்பட்டுள்ளதாம்.

இதேவேளை திருமலையிலிருந்து பருத்தித்துறைக்கான பயணிகள் கப்பல் எதிர்வரும் 22-ம் திகதி புறப்படவுள்ளது. சி

# இலங்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வாங்க பேச்சுக்கள் தற்போது கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் மத்தியில் நடைபெற்றுவருகிறது.

இலங்கையில் முன்னுள் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு ஆட்சிக்காலத்தில் அமெரிக்க தூதரகத்தில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு அமைக்கப்பட்டிருந்தது. பின்னர், கடும் எதிர்ப்பு காரணமாக திரு. பிரேமதாஸா ஆட்சிக்காலத்தில் அது மூடப்பட்டதும் தெரிந்ததே. சி

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள் அரியகலை சன சமூக நிலைய மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

இன்றைய முதல்ஆட்டத்தில் கெனடி கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் கழகமும். 2வது ஆட்டத்தில் தொடரிமாடி சென். லூட்ஸ் கழகத்தை எதிர்த்து ஸ்ரீவாகீஸ்வரி கழகமும், 3வது ஆட்டத்தில் பொற்பதி கழகத்தை எதிர்த்து அண்ணு ஸ்ரார் கழகமும் மோதும். வி-சி

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிறுவன ஒன்றிய மாவட்ட, கோட்ட நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10-00 மணிக்கு கோண்டாவிலில்அமைந்துள்ள யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிர்வாகிகள் அனைவரும் தவருது இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (சி)

# கோமாரி வருகிறது

(நெல்லியடி)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கி முடித்த கப்பல், லங்கா நேற்று மாலை கொழும்புக்குப் புறப்பட்டது

இதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் வர்த்தகர்களுக்கான சில்லறைப் பொருட்களுடன் கோமாரி கப்பல் நாளை காலை பருத்தித்துறையை வந்தடையும். 160 சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.